# APPOLO STUDY CENTRE

## TNPSC GROUP II MAIN EXAM

### கட்டாய தமிழ் தகுதித் தேர்வு - 1 (Type A)

Total Marks: 50
Time : 1 ½ hrs

**கேள்வி எண் 1** — 10 மதிப்பெண்கள்

1. **கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒருபங்கு அளவில் கருத்தி, உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை.**

மதுரை சின்னப்பிள்ளை பள்ளி செல்லாதவர். பட்டறிவினால் பலவற்றைக் கற்றார். இவர் கிராமத்தில் பெண்களையெல்லாம் ஒன்று திரட்டி விவசாய நிலத்தை குத்தகைக்கு எடுத்தார். கூலிவேலைக்கு ஆட்களைச் சேர்த்து நடவு, களையெடுப்பு, அறுவடை போன்ற வேலைகள் நடைபெறச் செய்தார். வரும் தொகையை சமமாய்ப் பகிர்ந்து கொடுத்தார்.

வயதானோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரையும் சேர்த்து அவர்களின் குடும்பங்களுக்கும் உதவினார். இவற்றையெல்லாம் கேள்விப்பட்ட மதுரை மாவட்ட ஆட்சியர், கண்மாயில் மீன்பிடிக்கும் குத்தகையை அவர்களுக்கு வழங்கினார்.

பெண்களுடன் சேர்ந்து ‘களஞ்சியம்’ என்ற குழுவை உருவாக்கினார். 10 பேருடன் தொடங்கப்பட்ட இக்குழு, இன்று பல மாநிலங்களிலும் பரவி, பல லட்சம் பேருடன் 30 ஆண்டுகளாய் செயலாற்றி வருகிறது. இந்திய நாட்டின் முதன்மை அமைச்சராய் இருந்த மாண்புமிகு வாஜ்பாய் அவர்கள், ‘பெண் ஆற்றல்’ விருதினை சின்னப்பிள்ளைக்கு வழங்கி, கால்களில் விழுந்து வணங்கினார். தமிழக அரசின் ஔவை விருது, தூர்தர்ஷனின் பொதிகை விருது, தாமரைத்திரு விருது எனப் பலவிருதுகள் பெற்றுள்ளார்.

**கேள்வி எண் 2** — 10 மதிப்பெண்கள்

2. **பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

தமிழ்-பிராமி கல்வெட்டுகள் கற்பாறைகளிலும் குகை வாழிடங்களிலும் காணப்படுகின்றன. சமணத் துறவிகள் இக்குகைகளைப் பெரும்பாலும் வாழிடங்களாகக் கொண்டிருந்தனர். உலகியல் வாழ்வைத் துறந்து, குகைகளில் வாழ்ந்த துறவிகளுக்கு அரசர்களும் வணிகர்களும் இயற்கையாக அமைந்த குகைகளை வாழிடங்களாக மாற்றி உதவினர். தமிழ்நாட்டில் மாங்குளம், முத்துப்பட்டி, புகலூர், அரச்சலூர், கொங்கர்புளியங்குளம், ஜம்பை, மதுரை உள்ளிட்ட பல இடங்களில் உள்ள குகைவாழிடங்களில் இன்றும் தமிழ் பிராமி கல்வெட்டுகளைக் காணலாம்.

**கேள்வி எண் 3** **10 மதிப்பெண்கள்**

3. பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்

Once Buddha and his disciples were thirsty. They reached a lake. But it was muddy, because somebody just finished washing their clothes. Buddha asked his disciples to take a little rest there by the tree. After half an hour, the disciples noticed that the water was very clear. Buddha said to them, "you let the water be and the mud settled down on it's own. Your mind is also like that. When it disturbed, just let it be".

**கேள்வி எண் 4** **20 மதிப்பெண்கள்**

a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக

1. செம்மொழி
2. விருந்தோம்பல்
3. இயற்கைவளம்
4. அறிதல்

b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க

1. பனி – பணி
2. நான் - நாண்
3. கிளி – கிலி
4. வேளை – வேலை

c. பிரித்து எழுதுக

1. பள்ளிக்கூடம்
2. மாசிலன்
3. எளிதாகும்
4. தம்முயிர்

d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக

1. நான் நேற்று தேர்வு எழுதினேன்
2. குழாயில் நீர் வந்தது
3. மதியம் மழை பெய்தது
4. இன்று பேருந்து வரும்

e. பிழை நீக்கி எழுதுக

1. திருவள்ளுவர் திருக்குரளை இயற்றினார்
2. விலக்கு நன்றாக எரிந்தது
3. தமிளின் சிறப்பு 'ழ' ஆகும்
4. இளமையில் கள்

APPOLO STUDY CENTRE